
# 7 புலவரின் அறிவுரை

காட்சி - 1

இடம் : பாண்டிய நாட்டில் ஓர் ஊர்
பாத்திரங்கள் : கூத்தனார், சாத்தனார்

(வீதியில் பெரியவர்கள் இருவர் சந்திக்கின்றனர்)



**சாத்தனார்** : என்ன கூத்தனாரே! உம்மைச் சந்தித்துப் பல நாட்கள் ஆகின்றன, மகிழ்ச்சியாக இருக்கிறீரா?

**கூத்தனார்** : நாடு இருக்கும் நிலை உமக்குத் தெரியாதா? சென்ற ஆண்டும் மழை இல்லை. எங்கும் பஞ்சம் பட்டினி. இந்தச் சூழலில் எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடியும்?

**சாத்தனார்** : மக்களின் துன்ப நிலையை உணராமல் அதிகாரிகள் அதிக வரி வாங்குகிறார்கள். வரி தர இயலாத மக்களைச் சிறையில் இட்டுக் கொடுமைப்படுத்துகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். உண்மையா?

**கூத்தனார்** : நீர் கேள்விப்பட்டது உண்மைதான். நான் அடிக்கடி வேறு ஊர்களுக்குச் சென்று வருபவன். நான் சென்ற ஊர்களில் எல்லாம் மக்கள் வரிக் கொடுமை தாங்காமல் அழுது புலம்புகிறார்கள்.

**சாத்தனார்** : ஊர்ப் பெரியவர்களாகிய நீங்கள் ஒன்று சேர்ந்து அரசரிடம் முறையிட்டால் இந்தத் துன்ப நிலை மாறாதா?

**கூத்தனார்** : அந்த முயற்சியில் இறங்காமலா இருப்போம்? அரசரைச் சந்திக்க எப்பொழுது அரண்மனை சென்றாலும் அரசர் அந்தப்புரத்தில் இருக்கிறார். இலக்கிய ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார் என்ற பதில்தான் கிடைக்கிறது. அரசரைச் சந்திக்க அனுமதி கிடைப்பது இல்லை..

**சாத்தனார்** : அரசரைச் சந்தித்தால்தானே மக்களின் துன்பத்தைப் போக்க முடியும். அவரைச் சந்திக்க ஏதேனும் வழி கண்டுபிடித்தாக வேண்டும்.

**கூத்தனார்** : அரசரைச் சந்திக்க வழி ஏதும் தெரியவில்லை. கையாலாகாத கோழையாகி விட்டதைப் போல என் உள்ளம் வருந்துகிறது.

**சாத்தனார்** : எனக்கொரு வழி தோன்றுகிறது.

**கூத்தனார்** : என்ன வழி சொல்லுங்கள்

**சாத்தனார்** : நாம் புலவர் பிசிராந்தையாரிடம் செல்வோம். நாட்டு மக்கள் படும் துன்பத்தைப் பற்றிச் சொல்வோம்.

**கூத்தனார்** : நல்ல வழி சொன்னீர். அரசர்களே போற்றி மதிக்கும் பெரும்புலவர் அல்லவா பிசிராந்தையார். மக்களின் துன்பம் நீங்க அவர் ஏதேனும் செய்வார். நாம் இப்பொழுதே அவரிடம் செல்வோம்.


(இருவரும் செல்கின்றனர்)

**திரை**

## காட்சி - 2

**இடம் : பிசிராந்தையார் வீடு**
**பாத்திரங்கள் : பிசிராந்தையார், கூத்தனார், சாத்தனார்**

**(பிசிராந்தையார் கட்டிலில் அமர்ந்து எழுத்தாணியால் ஓலைச் சுவடியில் எழுதிக் கொண்டிருக்கிறார். கூத்தனாரும் சாத்தனாரும் உள்ளே நுழைகிறார்கள்)**



**பிசிராந்தையார் :** (எழுந்து) வாருங்கள்! வாருங்கள்! இந்தக் கட்டிலில் அமருங்கள்! (வீட்டின் உள்ளே பார்த்து) விருந்தினர்கள் வந்திருக்கிறார்கள். உண்பதற்கு ஏதேனும் கொண்டு வா.

**சாத்தனார் :** இப்பொழுதுதான் நாங்கள் இருவரும் வயிறார உண்டுவிட்டு வந்தோம். இவர் என் நண்பர். கூத்தனார். தங்கள் உதவியை நாடி வந்தோம்.

**பிசிராந்தையார் :** எந்த உதவியானாலும் தயங்காமல் கேளுங்கள். என்னால் இயன்றதைச் செய்கிறேன். ஏதேனும் காப்பியம் இயற்ற வேண்டுமா? அல்லது யாரையாவது புகழ்ந்து வாழ்த்துப்பா பாட வேண்டுமா?

**கூத்தனார்** : நாங்கள் எங்களுக்காக எந்த உதவியும் கேட்டு வரவில்லை. இந்தப் பாண்டிய நாட்டு மக்களுக்குத் தங்களால் ஓர் உதவி ஆக வேண்டும்.

**பிசிராந்தையார்** : மக்களுக்கு என்ன குறை?

**கூத்தனார்** : புலவரே! பாண்டிய நாட்டின் நிலை தங்களுக்குத் தெரியாதா? வரிச் சுமை தாங்க மாட்டாமல் மக்கள் துன்பப்படுகிறார்கள். எங்கும் அழுகுரல் கேட்கிறது.

**பிசிராந்தையார்** : மிகுதியான வரியால் மக்கள் துன்பப்படுகிறார்கள் என்று நானும் கேள்விப்பட்டேன். பெரியவர்களாகிய நீங்கள் நேரே சென்று அரசரிடம் முறையிடுவதுதானே. புலவராகவும் விளங்கும் அரசர் அறிவுடைநம்பி மக்களின் துன்பத்தை ஒரு நொடிக்குள் போக்கி விடுவாரே. மென்மையான உள்ளம் உடையவர் ஆயிற்றே அவர்.

**சாத்தனார்** : நாங்கள் பலமுறை அரசரைச் சந்திக்க முயற்சி செய்து விட்டோம். அங்குள்ள அதிகாரிகள் 'அரசர் இலக்கிய ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார். இப்பொழுது யாரையும் சந்திக்க மாட்டார்' என்று எங்களைத் திருப்பி அனுப்பி விட்டார்கள். வேறு வழி இல்லாமல் தங்களிடம் வந்தோம்.

**பிசிராந்தையார்** : நான் என்ன செய்ய வேண்டும்?

**சாத்தனார்** : பாண்டியன் அறிவுடைநம்பியைச் சந்தித்து மக்களின் துன்பங்களை எடுத்துக் கூற வேண்டும்.

**பிசிராந்தையார்** : பாண்டியன் அறிவுடைநம்பி அரசர் மட்டுமல்ல. நல்ல புலவரும் ஆவார். 'மழலைச் செல்வமே எல்லாச் செல்வங்களையும் விட உயர்ந்தது' என்று அவர் இயற்றிய பாடல் காலத்தை வென்று என்றும் நிற்கும். அதிலும் 'இட்டுந் தொட்டும் கவ்வியும் துழந்தும், நெய்யுடை அடிசில் மெய்ப்பட விதிர்த்தும், மயக்குறு மக்கள்' என்று அழகிய அடிகளை யாரால் மறக்க இயலும்? நல்ல பண்பாளராகிய அவரிடம் நாட்டு மக்கள் நிலைமையை நான் எடுத்துச் சொல்லுகிறேன். மக்களின் துன்பம் நீங்கும்.

**கூத்தனார்** : அமைச்சர்களும் அதிகாரிகளும் அரசரைச் சந்திக்க யாரையும் அனுமதிப்பது இல்லையே.

**பிசிராந்தையார்** : புலவர்களைத் தடை செய்யும் அதிகாரம் யாருக்கும் கிடையாது.

**சாத்தனார்** : நாங்கள் வந்த வேலை முடிந்து விட்டது. புறப்படுகிறோம்.

(இருவரும் செல்கின்றனர்)

**(திரை)**


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## காட்சி - 3

**இடம் : அரண்மனை**
**பாத்திரங்கள் : அறிவுடைநம்பி , பிசிராந்தையார், வீரர்கள்**

**(அரச உடையில் அறிவுடைநம்பி ஓலையில் எழுதிக் கொண்டிருக்கிறார். பிசிராந்தையார் உள்ளே நுழைகிறார்.)**

**அறிவுடைநம்பி :** வாருங்கள் பிசிராந்தையாரே! நானே தங்களை அழைக்க வேண்டும் என்று நினைத்தேன். தாங்களே வந்துவிட்டீர்கள்.

**பிசிராந்தையார் :** (வியப்புடன்) அரசே! என்னை அழைக்க நினைத்தீர்களா? நான் வேறு வேலையாகத் தங்களைச் சந்திக்க வந்தேன்.

**அறிவுடைநம்பி :** காப்பியம் எழுத வேண்டுமென்பது நெடுங்கால ஆவல். அதற்காக அரச வேலைகளை எல்லாம் மறந்து ஓராண்டாக இந்தக் காப்பியத்தை எழுதியுள்ளேன். இது குறித்துத் தங்கள் கருத்தைக் கேட்க விரும்பினேன்.

**பிசிராந்தையார் :** அரசே! தாங்கள் இயற்றிய 'படைப்புப் பல படைத்து' என்ற பாடல் போதாதா? அந்தப் பாடலே தங்களைப் பெரும்புலவராக உலகிற்கு அறிமுகம் செய்து உள்ளதே. மேலும் காப்பியம் எழுத வேண்டுமா?

**அறிவுடைநம்பி :** அந்தப் பாடலுக்குக் கிடைத்த பேரும் புகழும்தான் என்னைக் காப்பியம் எழுதத் தூண்டி உள்ளது.

**பிசிராந்தையார் :** புலவரை ஆதரிக்கும் புரவலராகிய தாங்கள் பெரும் புலவராகவும் விளங்குவது எங்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அதை மறந்து விட்டுத் தாங்கள் காப்பியம் எழுதுவது முறையாகுமா? எங்களைப் போன்ற புலவர்களிடம் ஒப்படைத்தால் நாங்கள் எழுத மாட்டோமா?

**அறிவுடைநம்பி :** ஆட்சியை அமைச்சர்களும் அதிகாரிகளும் பார்த்துக் கொள்கிறார்கள்.

**பிசிராந்தையார் :** அரசரின் முதற் கடமை மக்களைக் காப்பது. அவர்களுக்கு எந்தக் குறையும் வராமல் ஆட்சி நடத்துவது. மக்களின் இயல்பு அறிந்து வரி வாங்குவது.

**அறிவுடைநம்பி :** தாங்கள் சொல்வது உண்மைதான். என் ஆட்சியில் மக்களுக்கு ஏதேனும் குறை உள்ளதா?

**பிசிராந்தையார் :** அரசே! மாநிறை என்ற சிறு அளவுள்ள நிலத்தில் விளைந்த நெல்லை யானைக்குக் கவனமாக உண்ணக் கொடுத்தால் அது பல நாட்களுக்கு உணவாக வரும். மாறாக நூறு செறு அளவுள்ள மிகப் பெரிய நிலத்தில் யானையையே உண்ணும்படி விட்டு விட்டால் அது வாயினால் உண்பதை விடக் காலினால் அழிப்பது மிகுதியாக இருக்கும். யானைக்கு நாம் உணவிடுவதா? அதையே உண்ணும்படி விட்டுவிடுவதா?

**அறிவுடைநம்பி :** புலவரே! எதற்காக இந்த உவமையைச் சொல்லுகிறீர்? யானைக்கு நாம் உணவிடுவதே அறிவுடைய செயலாகும்.


**பிசிராந்தையார் :** அரசே! ஆட்சிப்பொறுப்பை மறந்துவிட்டு காப்பியம் எழுதுகிறீர்கள். நாட்டில் நடப்பது தங்களுக்குத் தெரியாது. அமைச்சர்களும் அதிகாரிகளும் தங்கள் விருப்பம் போல மக்களை கசக்கிப் பிழிந்து வரிவாங்குகிறார்கள் எனும் அழுகுரல் கேட்கிறது. அரசராகிய தங்களைச் சந்தித்து முறையிட மக்களுக்கு அனுமதி இல்லை. தானும் உண்ணாமல் நிலத்தையும் பாழாக்கும் யானையின் செயல்போலத் தங்கள் செயல் உள்ளது. மக்களின் நிலையறிந்து வரி வாங்கினால் நாடு மேலும் மேலும் வளம் பெறும்.

**அறிவுடைநம்பி :** புலவரே! உங்களால் நல்லறிவு பெற்றேன். என்னைச் சூழ்ந்து இருப்பவர்கள் பேச்சை நம்பி மக்கள் மகிழ்ச்சியுடன் இருப்பதாக நினைத்தேன். அவர்கள் படும் துன்பத்தைத் தங்களால் அறிந்தேன். நான் என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள்.

**பிசிராந்தையார் :** அரசரே! தாங்களே ஆட்சிப்பொறுப்பை நேரடியாகக் கவனியுங்கள். ஊர்ப் பெரியவர்களை அடிக்கடி சந்தித்து நாட்டு நிலைமையைத் தெரிந்து கொள்ளுங்கள். மக்களுக்கு எது நல்லதோ அதைச் செய்யுங்கள். இந்த ஆண்டு மக்களுக்கு வரியை நீக்கினால் அவர்கள் பெரிதும் மகிழ்வார்கள்.

**அறிவுடைநம்பி :** யார் அங்கே?
(வீரன் ஒருவன் பணிவாக வணங்குகிறான்)
முரசு அடிப்பவனை அழைத்து வா.
(வீரன் செல்கிறான்)
புலவரே! இனி நல்லாட்சி நடத்துவதே என் முதற் கடமை. காப்பியம் எழுதும் முயற்சியை விட்டுவிட்டேன்.
(முரசு அடிப்பவன் வணங்குகிறான்)

**அறிவுடைநம்பி :** கடுமையான பஞ்சம் நிலவுவதால் வரி முழுவதும் இந்த ஆண்டு நீக்கப்பட்டு உள்ளது. வறுமையில் வாடுபவர்கள் அரண்மனைக்கு வந்து உதவி பெறலாம். இனி அரசர் நாள்தோறும் அரியணையில் அமர்வார். மக்களுக்கு எந்த குறையானாலும் அவரைச் சந்தித்து முறையிடலாம். இது அரசரின் ஆணை. நாடெங்கும் முரசு அறைந்து செய்தியைச் சொல்லிவிடு.



**முரசுஅடிப்பவன்:** அரசே! கட்டளையை இப்பொழுதே நிறைவேற்றுகிறேன். (முரசு அடிப்பவன் வணங்கிவிட்டுச் செல்கிறான்.)

**பிசிராந்தையார் :** அரசே! என் நோக்கம் இவ்வளவு எளிதில் நிறைவேறும் என்று நான் நினைக்கவில்லை. பெரும் புகழ்பெற வாய்ப்பு இருக்கும் காப்பியம் எழுதும் முயற்சியை மக்களின் நலத்திற்காகவும் அவர்கள் குறை தீர்ப்பதற்காகவும் விட்டுவிட்டீரே. தங்கள் புகழ் நீடூழி காலம் வாழ்க!

**பேராசிரியர் ஏ. சோதி**

## அரும்பதங்கள்

| | |
|---|---|
| அந்தப்புரம் | - அரண்மனையரசியும் பெண்களும் இருக்குமிடம். |
| இலக்கிய ஆராய்ச்சி | - ஒரு வடிவத்தில் எழுதப்பட்ட ஏதேனும் ஒன்றின் தன்மை, தரம், உண்மைகளைச் சோதனை செய்தல் |
| ஓலைச்சுவடி | - ஓலையை ஏடாகக் கொண்ட புத்தகம் |
| வரி | - பொதுநலனுக்காக செலவிடவேண்டி அரசு மக்களிடம் வசூலிக்கும் கட்டணம் |
| அரண்மனை | - அரசன் வசிக்கும் மாளிகை |
| காப்பியம் | - தெய்வத்தையோ, உயர்ந்த மக்களையோ கதைத் தலைவர்களாகக் கொண்டு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள் கூறும் நீண்ட செய்யுள் இலக்கியம் |
| அரியணை | - அரசன் அல்லது அரசி அமரும் அலங்கார இருக்கை |
| ஆணை | - உத்தரவு அல்லது கட்டளை |

## கிரகித்தற் பயிற்சி

1. *வீதியில் சந்தித்துக் கொண்ட பெரியவர்கள் யாவர்?*
2. *மக்களின் துன்பத்தை அரசருக்குத் தெரிவிக்க சாத்தனார் கூறிய வழி யாது?*
3. *புலவர் பிசிராந்தையார் மன்னன் அறிவுடை நம்பி இயற்றிய பாடல்களிலிருந்து வீட்டுக்கு வந்த பெரியவர்களுக்கு எடுத்துக் கூறிய பாடல் அடிகளைக் கூறுக.*
4. *அறிவுடைநம்பி அரச வேலைகளையெல்லாம் மறந்து ஓராண்டு காலமாகச் செய்து கொண்டிருந்த வேலை எது?*
5. *அறிவுடைநம்பி நல்லறிவு பெறக் காரணமாயிருந்த புலவர் பிசிராந்தையாரின் செயற்பாட்டை விளக்குக.*
6. *அக்காலத்தில் புலவர்களுக்கும் அரசருக்கும் இடையிலிருந்த தொடர்பு எத்தகையது?*

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

செயற்பாடு 1 : இந்த நாடகத்தில் தாம் இரசித்தவற்றையும் அதற்கான காரணத்தையும் குழுவிலுள்ள ஒவ்வொருவரிடமும் கேட்டு அறிக. அதில் நீர் விரும்பாத பகுதிகளையும் அதற்கான காரணத்தையும் பண்பாகக் கூறுக.

செயற்பாடு 2 : அறிவுடைநம்பியின் செயற்பாடுகள் பற்றி உமது அபிப்பிராயத்தை பிறர் ஏற்றுக்கொள்ளும் வகையில் தரவுகளை ஒழுங்கமைத்து, விபரங்களைத் தெளிவுபடுத்தி, கிரகித்து, வலியுறுத்திக் கூறுக.

செயற்பாடு 3 : நாடகம் எழுதப்பட்டிருக்கும் முறையினை அவதானித்து பாத்திரங்களின் பண்புகளை மனங் கொண்டு உணர்வு பூர்வமாக வாசிக்குக.

செயற்பாடு 4 : மூன்று காட்சிகளையும் ஒவ்வொரு குழுவாக ஏற்று நாடகத்தை முழுமையாக நடித்துக் காட்டுக.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

# மொழிவளம்

## ▶ அகராதிப் பயன்பாடுகள்

**பின்வரும் பாடலடிகளை வாசிப்போம்**

வாள் வலந்தர மறுப்பட்டன
செவ்வானத்து வனப்பு போன்றன
தாள் களங் கொளக் கழல் பறைந்தன
கொல் ஏற்றின் மருப்பு போன்றன

-புறநானூறு-

இப்பாடலில் இடம்பெறும் வாள், தர, போன்றன, செவ்வானம் ஆகிய சொற்களைத் தவிர ஏனைய சொற்கள் அன்றாட வாழ்க்கையில் நாம் பயன்படுத்தாத சொற்களாக உள்ளன. இச் சொற்களின் பொருளை விளங்கிக் கொள்வது எப்படி? அகராதிகளைப் பயன்படுத்தி சொற்களின் பொருளை விளங்கிக்கொள்ள முடியும். அகராதியில் சொற்கள் அகர வரிசையில் அமைந்துள்ளன. நமக்கு பொருள் தெரியாத சொற்களை அகராதியைப் பயன்படுத்தி பொருள் விளங்கிக் கொள்ள முடியும்.

உதாரணமாக:

இப்பாடலில் இடம்பெறும் சொற்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்திக் கொள்வோம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஏறு | 2. கழல் | 3. களம் | 4. கொல் | 5. செவ்வானம் |
| 6. பறைதல் | 7. மரு | 8. மறுப்பு | 9. வளம் | 10. வனப்பு |
| 11. வால் | | | | |

இனி அகராதியைப் பயன்படுத்தி இச்சொற்களுக்குரிய பொருளை விளங்கிக்கொள்ள முடியும்.

### பயிற்சி

★ ஆசிரியரின் உதவியுடன் இச்சொற்களுக்குரிய பொருளை அகராதியைப் பயன்படுத்தி விளங்கி இப்பாடலின் பொருளை எழுதுங்கள்.

# இலக்கணம்

## ▶ 'ன'கர 'ண'கர வேறுபாடுகள்

பின்வரும் உதாரணங்களைக் கவனிப்போம்.

1. வானம் மிகவும் அழகாக உள்ளது.
2. வாணம் ஆபத்தானது என்று அப்பா சொன்னார்.

முதலாவது வசனத்தில் இடம்பெறும் வானம் என்ற சொல் ஆகாயத்தைக் குறிக்கின்றது.

இரண்டாவது வசனத்தில் இடம்பெறும் வாணம் என்ற சொல் வெடி என்ற பொருளைத் தருகிறது.

இவ்வாறு 'ன' , 'ண' ஆகிய எழுத்துக்கள் பொருள் வேறுபாட்டைத் தருவனவாகும். இவற்றை விளங்கிக் கொள்வதன் மூலம் மொழியைப் பிழையின்றிப் பயன்படுத்த முடியும்.

| | | |
|---|---|---|
| அவண் | - | அவ்விடம் |
| அவன் | - | அந்த மனிதன் |
| கண்ணன் | - | திருமால் |
| கன்னன் | - | குந்தியின் மகன் (கர்ணன்) |
| அண்ணம் | - | மேல்வாய் |
| அன்னம் | - | சோறு, பறவை |
| காணல் | - | பார்த்தல் |
| கானல் | - | வெப்பம் |
| தண்மை | - | குளிர்மை |
| தன்மை | - | குணம், இயல்பு |
| நாண் | - | கயிறு |
| நான் | - | தன்மைப் பெயர் |

## பயிற்சி

**1. பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

1. மலர்களிலிருந்து ............. வீசியது. (மணம் , மனம்)
2. நான் ............. நண்பன் (உன் , உண்)
3. இராமன் எய்த ............. வாலியின் மார்பைத் துளைத்தது (பாணம் , பானம்)
4. கைலாசபதியின் தமிழ்ப் ............. போற்றுதற்குரியது (பனி , பணி)
5. வெள்ளத்தின் காரணமாக .............க் கட்டுகள் உடைப்பெடுத்தன. (அனை , அணை)

**2. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியங்களை ஆக்குவோம்.**

1. தன் : ..............................................................
   தண் : ..............................................................
2. பாணம் : ..............................................................
   பானம் : ..............................................................
3. அண்ணம் : ..............................................................
   அன்னம் : ..............................................................
4. என் : ..............................................................
   எண் : ..............................................................
5. நான் : ..............................................................
   நாண் : ..............................................................